**முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், விழுப்புரம்**
**O.S. No. 346/2022**

**Witness PW 2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கல்யாணி | தொழில் | |
| க/பெ | பரமசிவம் | வயது | |
| ஊர் | | தேதி | 27.03.2026 |
| மாவட்டம்; | | | |

இன்று (27.03.2026) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை**

**சத்தியமாக சொல்கிறேன்**

நான் 10 ம் வகுப்வு வரை படித்துள்ளேன். எனக்கு தமிழ் நன்றாக எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியும். நான் தையல் வேலை செய்து வருகிறேன். நான் நடத்தி வரும் நிறுவனத்தில் சுமார் 1500 க்கு மேற்பட்ட நபர்கள் வேலை செய்து வருகிறார்கள். அந்த நிறுவனத்தின் பெயர் மகளிர் தையல் தொழில் சங்கம். நான் சுயஉதவி குழு தலைவராக ஏற்கனவே பொறுப்பில் இருந்து உள்ளேனா என்றால் இல்லை. தற்பொழுதும் சுய உதவி குழு தலைவராக இல்லை.நான் வளவனூர் கிராமத்தில் சுய உதவி குழு தலைவியாக இருந்து சுமார் 20 பெண்களுக்கு ஒருங்கிணைப்பாளராக இருந்துள்ளேன் என்றுசொன்னால் இல்லை. எனக்கு சுமார் 60 வயதாகின்றது. நான் தான் கல்யாணி என்பதற்கு அடையாள ஆவணம் ஏதேனும் நீதிமன்றத்தில் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. எனது கணவர் திருமண மண்டபத்தில் கணக்கு எழுதுபவராக இருந்தார். எனக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 2 பிள்ளைகள். அவர்கள் பெயர் பாபு மற்றும் எனது மகள் வெற்றித்திலகம். எனது மகள் தான் மூத்தவர். எனது மகன் தற்பொழுது வளவனூரில் வசித்து வருகிறார். எனது மகனுக்கு என்ன தொழில் என்றுசொன்னால் ஒரு நிறுவனத்தில் பணி செய்து வருகிறார். 50,000 ரூபாய்க்கு மேல் சம்பாதித்து வருகிறார். இந்த வழக்கின் வாதி இலக்கியா என்பவர் எனது மகனின் மனைவி மற்றும் எனது மருமகள் என்றால் சரி. தற்பொழுது எனது மகன் பாபு என்பவர் என்ன விலாசத்தில் வசித்து வருகிறார் என்றுசொன்னால் நெ. 20, 4வது குறுக்கு தெரு, வளவனூர்

போஸ்ட்,விழுப்புரம் தாலுக்கா. நானும் அதே முகவரியில் தான் வசித்து வருகிறேன். எனது மருமகள் என்ன வேலை செய்து வருகிறார் என்றால் தையல் தொழில் செய்து வருகிறார். வீட்டிலேயே தையல் தொழில் செய்து வருகிறார். வேறு யாரும் அவருடன் வேலை செய்யவில்லை. எனது மருமகளுக்கு எத்தனை வங்கியில் கணக்கு உள்ளது என்றால் ஒரு வங்கியில் தான் கணக்கு உள்ளது. அது என்ன வங்கி என்று எனக்கு தெரியாது. எனது மருமகளின் வருமானம் மற்றும் எனது மகனின் வருமானம் ஆகியவற்றை வங்கியில் தான் போட்டு வைப்பார் என்றுசொன்னால் இல்லை. அவர்களது வங்கி கணக்கை தாக்கல் செய்தால் அவர்களது வருமானம் மற்றும் செலவு வகைகள் தெரிய வரும் என்றால் சரியல்ல. அவர்கள் வருமானத்தை வீட்டு செலவிற்கு மற்றும் பிள்ளைகளின் கல்வி செலவிற்கு பயன்படுத்திக்கொள்வார்கள். வளவனூர் பேரூராட்சியின் கீழ் வருகின்றது. அது கிராமம் இல்லை. வா.சா.ஆ 1 ன் கைரேகை என்ற இடத்தில் கைரேகை எதுவும் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரி. எனக்கு ஆங்கிலம் எழுதபடிக்க தெரியாது. நான் எனது கையொப்பத்தை ஆங்கிலத்தில் தான் செய்வேன். வா.சா.ஆ 1ல் எனது கையொப்பத்தின் கீழ் பெயர் மற்றும் முகவரி எழுதப்படவில்லை என்றுசொன்னால் எழுதப்பட்டிருந்தது. சாட்சிகள் என்ற இடத்தில் நான் மட்டும் தான் கையொப்பம் செய்திருந்தேன் என்றால் சரி. எனது கையொப்பத்திற்கு கீழ் என்ன வாசகம் உள்ளது என்பதை என்னால் சொல்லமுடியுமா என்றால் அது ஆங்கிலத்தில் உள்ளதால் என்னால் படிக்கஇயலவில்லை. சாட்சிகள் கையொப்பத்தின் கீழ் தேதி எதுவும் போடவில்லை என்றுசொன்னால் நான் போட்டுள்ளேன். முத்திரைவில்லையின் மேல் உள்ள கையொப்பத்திலும் அதற்கு கீழ் உள்ள கையொப்பத்திலும் உள்ள முதல் எழுத்து F என்று உள்ளது என்றால் சரி. இரண்டு கையொப்பத்தில் உள்ள எழுத்திற்கும்வித்தியாசம் உள்ளது என்றால் உள்ளது அது பொய் கையொப்பம். நான் தாக்கல் செய்த முதல் விசாரணை சாட்சியத்தில் உள்ள விவரம் எனக்கு தெரியும். அதனை யார் தயார் செய்தார்கள் என்றால் வண்டிமேடு கணேசன் என்பவர் தயார் செய்தார். எனது மருமகள் வழக்கு தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். கணேசன் என்பவர் எனக்கு உறவுமுறை என்றால் நாங்கள் அனைவரும் ஒரே ஊர்க்காரர்கள். கணேசன் என்பவர் இறந்துவிட்டார். வா.சா.ஆ 1ல் கணேசன் கையொப்பம் செய்யவில்லை என்றால் கையொப்பம் செய்துள்ளார். என்னிடம் காட்டப்படும் கணேசன் என்பவர் கையொப்பம் செய்துள்ளாரா என்றால் இல்லை. வா.சா.ஆ 1ல் எழுதப்பட்டுள்ள விவரங்கள் நீல நிற பேனா மையினால் எழுதப்பட்டுள்ளது.

கையொப்பம் கருப்பு நிற பேனா மையினால் செய்யப்பட்டுள்ளது என்றால் சரி. வா.சா.ஆ 1 மோசடியானது என்றாலும் ஒரே நாளில் எழுதப்பட்டிருந்தால் ஒரே நிற பேனாவினால் எழுதப்பட்டிருக்கும் என்றாலும் எங்கள் குடும்பத்தால் தயார் செய்யப்பட்டது என்பதால் வா.சா.ஆ1 ஆவணம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கினை நான் தான் எனது மருமகளை வைத்து தாக்கல் செய்துள்ளேன் என்றுசொன்னால் சரியல்ல. எந்த எந்ததேதியில் நான் பணம் கேட்டேன் என்றால் தேதி எனக்கு தெரியாது. போகும்போது வரும்போது பார்த்து கேட்பேன். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு எனது மருமகள் வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தாரா என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லை. இந்த வழக்கிற்கு முன்பு சாந்தா என்பவரை வைத்து பிரதிவாதியின் மீதும் அவரது கணவர் மீதும் ஒரு வழக்கு தாக்கல் செய்திருந்தேன் என்றால் இல்லை.அந்த வழக்ககில் பிரதிவாதிகள் குடியிருக்கும் வீட்டினை ஜப்தி செய்து வைத்துள்ளோம் என்றுசொன்னால் இல்லை. நான் சுயஉதவி குழு நடத்தி அதன் வாயிலாக அதிக வட்டிக்கு பணம் கொடுத்து வருகிறேன் என்றுசொன்னால் இல்லை. நான் கடுமையான வட்டி கேட்பதால் பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளது என்றுசொன்னால் இல்லை. தாவா கடனுறுதி சீட்டு மோசடியானது என்றாலும் நான் எனது மருமகளுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledge by him/her to be correct.

(sd/-M.S. Varalakshmi)
I Additional Subordinate Judge,
Villupuram